செய்திப் பணிப்பாளர்/ செய்திப் பதிப்பாசிரியர் மார்ச் 21, 2017

# செய்தி வெளியீடு

## தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் (அடிப்படை 2013=100) ; பெப்ரவரி 2017

### தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களம்

### தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு

தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் அறிக்கை வெளியிடுகையில், தொகைமதிப்பு, புள்ளிவிபரப் பணிப்பாளர் நாயகம் கலாநிதி. அமர சத்தரசிங்ஹ அவர்கள், 2017 பெப்ரவரி இற்கான தே.நு.வி.சு. அடிப்படையான வருடத்தின் மீது வருடம் பணவீக்கம், 2017 ஜனவரி இலிருந்த 6.5% இலிருந்து 8.2% ஆக அதிகரித்துள்ளதாகத் தெரிவித்தார். பணவீக்க அதிகரிப்பிற்கான காரணம், 2016 பெப்ரவரியில் ஒப்பீட்டளவில் குறைந்த விலை மட்டங்கள் நிலவியமையாகும்( அதாவது, 2016 பெப்ரவரியில் ஒப்பீட்டளவில் குறைந்த விலை மட்டங்கள் நிலவியதாக அறிவிக்கப்பட்டிருந்தது.). 2016 பெப்ரவரியில் உணவுப் பிரிவிலிருந்து பணவீக்கத்திற்கான பங்களிப்பு -0.3% ஆகவும் உணவல்லாப் பிரிவிலிருந்து பணவீக்கத்திற்கான பங்களிப்பு 2.0% ஆகவும் இருந்தது. எனினும் 2017 பெப்ரவரி இல், உணவு மற்றும் உணவல்லாப் பிரிவுகளிலிருந்து பணவீக்கத்திற்கான பங்களிப்புகள் முறையே 4.5%, 3.8% ஆக காணப்பட்டன.

தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களம், 2017 பெப்ரவரி இற்கான தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண்ணை வெளியிட்டுள்ளது. 2017 பெப்ரவரி இற்கான தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண் 119.9 என கணிப்பிடப்பட்டுள்ளது. இது கடந்த மாத (ஜனவரி) சுட்டெண்ணான 119.3 உடன் ஒப்பிடுகையில் 0.6 சுட்டெண் புள்ளி அல்லது 0.5 சதவீத அதிகரிப்பைக் காட்டுகிறது. இது உணவுப் பொருட்களின் செலவுப் பெறுமதி 0.31% அதிகரிப்பினாலும் மற்றும் உணவல்லாப் பொருட்களின் செலவுப் பெறுமதி 0.23% அதிகரிப்பினாலும் ஏற்பட்டதாகும்.

ஜனவரி 2017 உடன் ஒப்பிடுகையில் 2017 பெப்ரவரி இற்கான உணவுப் பொருட்களின் செலவுப் பெறுமதி அதிகரிப்பிற்கான காரணம், தேங்காய், மரக்கறி, தேங்காய் எண்ணெய், உடன் மீன், பச்சை மிளகாய், வாழைப்பழம், மாம்பழம், வெள்ளைப்பூடு, சின்ன வெங்காயம் என்பவற்றின் விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பேயாகும். எனினும் அரிசி, தேசிக்காய், உருளைக்கிழங்கு, மைசூர் பருப்பு, கோழி இறைச்சி, செத்தல் மிளகாய், மிளகாய்த்தூள் என்பவற்றின் விலைகளில் வீழ்ச்சி காணப்பட்டது.

முந்தைய மாதத்துடன் ஒப்பிடுகையில் 2017 பெப்ரவரி இற்கான உணவல்லாப் பொருட்களின் செலவுப் பெறுமதி அதிகரிப்பிற்கான காரணம், போக்குவரத்து', 'கல்வி', 'வீடு, நீர், மின், எரிவாயு, ஏனைய எரிபொருள்', 'தளபாடம், குடித்தன உபகரணம், வழமையான குடித்தனப் பராமரிப்பு', 'நானாவிதப் பொருட்கள், சேவைகள்' என்பவற்றில் ஏற்பட்ட செலவுப் பெறுமதி அதிகரிப்பாகும். எனினும் 'மது பானங்கள், புகையிலை மற்றும் போதைவஸ்து', 'கேளிக்கை மற்றும் கலாச்சாரம்' என்பவற்றின் செலவுப்பெறுமதியில் வீழ்ச்சி காணப்பட்டது. மேலும் கடந்த மாதத்துடன் ஒப்பிடுகையில் 'உணவு விடுதியும் ஹோட்டல்களும்', 'உடையும் காலணியும்' பிரிவின் செலவுப் பெறுமதியில் மிகச்சிறிதளவு அதிகரிப்புக் காணப்பட்டதுடன் 'சுகாதாரம்' பிரிவுப்பெறுமதியில் மிகச்சிறிதளவு வீழ்ச்சி காணப்பட்டது. 'தொடர்பாடல்' பிரிவுக்கான செலவுப் பெறுமதியில் இம்மாதம் மாற்றம் எதுவும் காணப்படவில்லை.




## தே.நு.வி.சு. இன் அசைவுகள் (அடிப்படை : 2013 = 100)

| வருடம் | மாதம் | சுட்டெண் | சுட்டெண்ணிற்கான மாதத்திற்கு மாதம் % மாற்றம் | வருடத்தின்மீது வருடம் பணவீக்க% |
|---|---|---|---|---|
| 2016 | பெப்ரவரி | 110.8 | -1.1 | 1.7 |
| | மார்ச் | 110.0 | -0.7 | 2.2 |
| | ஏப்ரல் | 111.6 | 1.5 | 4.3 |
| | மே | 113.7 | 1.9 | 5.3 |
| | யூன் | 116.1 | 2.1 | 6.4 |
| | யூலை | 115.2 | -0.8 | 5.8 |
| | ஓகஸ்ட் | 113.3 | -1.6 | 4.5 |
| | செப்ரெம்பர் | 113.5 | 0.2 | 4.7 |
| | **ஒக்ரோபர்** | 114.7 | 1.1 | 5.0 |
| | நவம்பர் | 116.6 | 1.7 | 4.1 |
| | டிசம்பர் | 118.0 | 1.2 | 4.2 |
| 2017 | ஜனவரி | 119.3 | 1.1 | 6.5 |
| | பெப்ரவரி | 119.9 | 0.5 | 8.2 |

தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களம்

தொ. இல.: 011-2147001 / 011-2147020